மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM தේසියම්

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT


No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 70 | 30.05.2023 (செவ்வாய்க்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00

## போரில் உயிரிழந்தவர்களுக்குப் பொது நினைவுத் தூபி :
## டக்கி - விக்கி ஆதரவு!



1983-2009 உள்நாட்டு இறுதிப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் பலர் உயிரிழந்துள்ளனர். அவர்களை ஒன்றாக நினைவு கூருவதற்கு நினைவுத் தூபி அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சரவையில் முன்வைத்தேன்.



பக்கம் 5



பக்கம் 5

## மாங்குளத்தில் பௌத்த யாத்திரிகர் மடம்
## கட்டுவதற்கான காணி பங்கீடு..!
### தொடரும் சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பு

## தமிழ்த் தேசிய அரசியலில் நீடிக்கத் தகுதியற்றவர் விக்னேஸ்வரன்: சுகாஷ்



பக்கம் 5

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் கேள்வி ஒன்றை முன் வைத்துள்ளார். அதாவது, இனப்படுகொலை செய்த இராணுவத்திற்கும் விடுதலைக்காகப் போராடிய தமிழ் மக்களுக்கும் ஒரே இடத்தில் அஞ்சலி என்பதை ஏற்க உங்களால்

## இந்தியாவும் தமிழ்க் கட்சிகளும் திரைமறைவில் காதல்..!
### இலங்கைக்கு ஆபத்து..! சரத் வீரசேகர எச்சரிக்கை..!



பக்கம் 5

இந்தியாவும் தமிழ்க் கட்சிகளும் திரைமறைவில் காதல் கொண்டால் அது இலங்கைக்கு ஆபத்தாக அமையும். இது தொடர்பில் இலங்கை அரசு உரிய கவனம் செலுத்தவேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரித்தார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் சந்திக்கவுள்ளனர் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

## பௌத்த தேரர்களை நோக்கியும் சட்டம் பாய வேண்டும்..! : மனோ எம்பி காட்டம்!

இன மத வெறுப்பை கக்கி வரும் பௌத்த தேரர்களை நோக்கியும் சட்டம் இனி பாய வேண்டும் என தமிழ் முற்போக்கு



பக்கம் 5

## பேராசிரியர்கள் ஒன்றிணைந்து செயற்பட்டால் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தை கல்வியால் உச்சத்திற்குக் கொண்டுவர முடியும் - கலாநிதி ஆறு. திருமுருகன்



பக்கம் 5

தற்போதைய சூழலில் தனியார் பல்லைகழகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. இத்தகைய அனுமதிகள் பெற்று தனியார் பல்கலைக்கழகங்கள் இங்கும் உருவாகின்றபோது வாள்வெட்டுக் கலாச்சாரம் போதைவஸ்துக் கலாச்சாரங்கள் இல்லாது போகும் நிலை ஏற்படும் எனவே பேராசிரியர்கள் கல்விமான்கள் சமுதாயப் பெரியார்கள் சான்றோர்கள் ஒன்றுகூடி இதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும்.

## அரசியல் ரீதியிலான ஆளுநர் மாற்றம் : ஜனாதிபதிக்கு பாராட்டு! சி.வி.கே.சிவஞானம்

அண்மையில் நியமிக்கப்பட்ட மூன்று ஆளுநர்கள் நியமனம் தொடர்பில் ஜனாதிபதிக்கு உண்மையிலேயே பாராட்டுகளை தெரிவிக்க வேண்டும் என வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார். அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போது வட மாகாண சபை அவைத்தலைவர் இதனை தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில்,

ஆளுநர்கள் நியமனம் தொடர்பில் ஜனாதிபதிக்கு உண்மையிலேயே பாராட்டுகளை தெரிவிக்க வேண்டும். பதவி நீக்கப்பட்ட



பக்கம் 5

## ஜனாசா எரிப்பு நீடிக்க ரிஷாத் - ஹகீம் ஆகியோரே காரணம்..! அலி சப்ரி பகிரங்க குற்றச்சாட்டு



பக்கம் 5

கொவிட்-19 தொற்றினால் மரணிப்பவர்களின் உடல்கள் தகனம் செய்யப்படல் வேண்டும் என்று சுகாதார துறையினரின் தீர்மானம் அறிவிக்கப்பட்டபோது, குறித்த வைரஸ் தாக்கத்தினால் மரணமடையும் முஸ்லிம்களது ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கான அனுமதி முஸ்லிம்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு தாமும் இந்நாள்







# "உய்குர்" சீனாவின் கலாச்சார இன அழிப்பு உருக்குலையும் "உய்குர்" மக்களின் தேசியம்!










உய்குர் மக்களை அடக்குவதன் மூலம் சீனா மனிதகுலத்திற்கு எதிரான இனப்படுகொலை மற்றும் குற்றங்களைச் செய்ததாக சர்வதேச நாடுகள் நீண்ட காலமாக குற்றம் சாட்டி வருகின்றன.

உய்குர் இன மக்கள் நெடுங்காலமாக, சீனாவிடமிருந்து விடுதலை பெறக் கோருகின்றனர். ஆனால், சீனா இதைப் பல ஆண்டுகளாக மறுத்துவருகிறது.

சீனாவில் சிஞ்சியாங் வடமேற்கு பிராந்தியத்தில் பெரும்பாலும் முஸ்லீம் உய்குர் சமூகத்தை சேர்ந்த மக்கள் தொடர்பாக சீனா உலகம் முழுவதிலும் இருந்து பல்வேறு கண்டனங்களையும், விமர்சனங்களையும் எதிர்கொண்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளில் "மறு கல்வி முகாம்கள்" என்று அரசு வரையறுக்கும் விஷயத்தில் சீனா ஒரு மில்லியனுக்கும் அதிகமான உய்குர்களை தடுத்து வைத்திருப்பதாக சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் நம்புகின்றன. அந்த முகாம்களில் உய்குர்கள் கட்டாய உழைப்பிற்கு பயன்படுத்தப்படுவதாகவும், பெண்கள் வலுக்கட்டாயமாக கருத்தடை செய்யப்படுவதற்கு உட்படுத்தப்படுவதாகவும் அதிக சான்றுகள் உள்ளன.

## தொடரும் சீனா மீதான குற்றச்சாட்டு :

உய்குர்களுக்கு எதிராக சீனா இனப்படுகொலை செய்ததாக தொடர்ந்தும் அமெரிக்கா குற்றம் சாட்டி வருகிறது. சர்வதேச சட்டங்களின்படி, இனப்படுகொலை என்பது ஒரு தேசிய, இன அல்லது மதக் குழுவை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்கம் ஆகும். அதன்படி முகாம்களில் உய்குர்களைத் தடுத்து நிறுத்துவதோடு, உய்குர் குழந்தைகளை அவர்களது குடும்பங்களிலிருந்து பிரிப்பது, மக்கள்தொகையை அடக்குவதற்கு உய்குர் பெண்களை சீனா பலவந்தமாக கருத்தடை செய்ய வைப்பதாக சில குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. சமீபத்தில் அமெரிக்க நிர்வாகத்தின் கீழ் டொனால்ட் டிரம்ப் பதவியில் இருந்த போது, அமெரிக்க வெளியுறவு மந்திரியாக இருந்த மைக் பாம்பியோ இந்த சம்பவம் குறித்து தெரிவித்ததாவது, "அங்கு இனப்படுகொலை நடந்து கொண்டிருக்கிறது என்று நான் நம்புகிறேன். மேலும் சீனக் கம்யூனிச கட்சி-அரசால் உய்குர்களை அழிக்க திட்டமிடப்பட்ட முயற்சியை நாங்கள் காண்கிறோம்." என்று கூறினார்.

சிஞ்சியாங்கில் உள்ள "தீவிரவாத எதிர்ப்பு மையங்களில்" சீனர்கள் ஒரு மில்லியன் மக்களை வைத்திருப்பதாக நம்பத்தகுந்த தகவல்கள் இருப்பதாக 2018 ஆம் ஆண்டில் ஐ.நா மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது. முகாம்களில் இருந்து தப்பிக்க முயற்சிக்கும் நபர்கள் உடல், மன மற்றும் பாலியல் சித்திரவதைகளை எதிர்கொண்டதாகவும், பெண்கள் கூட்டு கற்பழிப்பு மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளானதாகவும் குற்றசாட்டுக்கள் பதிவாகியுள்ளன. டிசம்பர் 2020இல் நடந்த ஆய்வில் அரை மில்லியன் மக்கள் பருத்தி எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாகவும், மறு கல்வி முகாம்களின் அடிப்படையில் புதிய தொழிற்சாலைகள் கட்டப்பட்டுள்ளன என்பதற்கான சான்றுகள் இருப்பதையும் கண்டறிந்துள்ளது.

## மண்ணின் மைந்தர்களான உய்குர்கள்:

மண்ணின் மைந்தர்களான "உய்குர்" மக்கள், துருக்கி மொழிக் குடும்பத்தை சேர்ந்த மொழி பேசுவதுடன், இஸ்லாமிய மதத்தை பின்பற்றுகின்றனர். சின்ஜியாங் பிராந்தியத்தில் வடமேற்கு சீனாவில் சுமார் 12 மில்லியன் உய்குர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வாழும் பகுதி அதிகாரப்பூர்வமாக சிஞ்சியாங் உய்குர் தன்னாட்சி மண்டலம் (XUAR) என்று அழைக்கப்படுகிறது. உய்குர்கள் துருக்கியைப் போலவே தங்கள் சொந்த மொழியைப் பேசுகிறார்கள். மேலும் தங்களை கலாச்சார ரீதியாகவும் இன ரீதியாகவும் மத்திய ஆசிய நாடுகளுடன் மிக நெருக்கமானவர்களாக பார்க்கப்படுகிறார்கள்.

கிட்டத்தட்ட ஈரான் அளவான மாநிலத்தில், பாலைவனத்தையும், அதில் திரியும் அடர்ந்த ரோமங்கள் கொண்ட ஒட்டகங்களையும் அங்கே காணலாம். எரிபொருள் தாகம் கொண்ட சீன பொருளாதாரத்திற்கு, சிங்ஜியாங்கில் கொட்டிக் கிடக்கும் எண்ணையும், எரிவாயுவும் வரப்பிரசாதங்கள். இதனால் சின்ஜியாங் "சீனாவின் குவைத்" என்று பொருளாதார அறிஞர்கள் செல்லப்பெயர் சூட்டியிருந்தனர்.

செல்வச் செழிப்புடன் திகழ வேண்டிய மாநிலத்தில், பொருளாதார ஏற்றத்தாழ்வு இரு வேறுபட்ட இனங்களை எதிரிகளாக்கியுள்ளது. சீனர்களால் சுரண்டப்படுவதாக துருக்கி இனத்தவர்கள் குமுறுகின்றனர். தொழிற்துறை விருத்தி சீனர்களுக்கே சாதகமாக அமைவதாக மனம் வெதும்புகின்றனர். வசதிபடைத்த நகரமயமாக்கப்பட்ட இடங்கள் சீனரின் வாழ்விடமாகவும், ஏழ்மையும், குறைபாடுகளும் கொண்ட குடியிருப்புகளில் உய்குர் மக்களும் இரு வேறு உலகங்களில் வாழ்கின்றனர்.

இந்த உய்குர் இனத்தவர் சின்ஜியாங் மக்கள் தொகையில் பாதிக்கும் குறைவாகவே உள்ளனர். கடந்த தசாப்தங்களில், சீனாவின் பெரும்பான்மை இனத்தவரான ஹான் சீனர்கள் சின்ஜியாங்கிற்கு பெருமளவில் இடம்பெயர்ந்துள்ளனர். இதன் காரணமாக உய்குர்கள் தங்கள் கலாச்சாரமும், வாழ்வாதாரமும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதாக உணர்கின்றனர். திட்டமிட்ட அல்லது பொருளாதார நலன்களுக்காக குடியேறும் சீன மக்கள், மாநிலத்தின் குடிசனப் பரம்பலில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றனர். இதனால் தமது பாரம்பரிய மண்ணில், தாம் சிறுபான்மையினராகி வருவதாக உய்குர் இனத்தவர்கள் முறையிடுகின்றனர்.

## திபெத்தைப் போலவே உய்குர் :

சின்ஜியாங் சீனாவின் வடமேற்கில் அமைந்துள்ளது. இது நாட்டின் மிகப்பெரிய பிராந்தியமாகும். திபெத்தைப் போலவே, இது தன்னாட்சி மற்றும் சுயராஜ்யத்தின் சில சக்திகளைக் கொண்டுள்ளது. ஆனால் நடைமுறையில், இரு நாடுகளும் மத்திய அரசால் பெரும் கட்டுப்பாடுகளை எதிர்கொள்கின்றன. சின்ஜியாங் பெரும்பாலும் பாலைவனப் பகுதியாகும்.

இது உலகின் பருத்தியில் ஐந்தில் ஒரு பகுதியை உற்பத்தி செய்கிறது. மேலும் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தி செய்யும் பகுதியாகும். மத்திய ஆசியா மற்றும் ஐரோப்பாவிற்கு அருகாமையில் இருப்பதால் இதனை ஒரு முக்கியமான வர்த்தக இணைப்பாக பெய்ஜிங் பார்க்கிறது.

20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், உய்குர்கள் விடுதலை வேண்டி அதன் சுதந்திரத்தை அறிவித்தனர். ஆனால் இப்பகுதி 1949 இல் சீனாவின் புதிய கம்யூனிஸ்ட் அரசாங்கத்தின் முழு நிலப்பரப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது

## ஒடுக்குமுறையின் வரலாற்று காரணம் :

1990-களில் இருந்து சின்ஜியாங்கில் உய்குர் மக்களிடையே எதிர்ப்பு மற்றும் பிரிவினைவாத உணர்வு உயர்ந்தது. சில சமயங்களில் இப்பிராந்தியம் முழுமையாக வன்முறையில் மூழ்கியது. 2009 ஆம் ஆண்டில் சின்ஜியாங்கில் ஏற்பட்ட மோதல்களில் சுமார் 200 பேர் இறந்தனர். இந்த சம்பவத்திற்கு சீனர்கள் தங்கள் சொந்த மாநிலத்தை விரும்பும் உய்குர்கள் மீது குற்றம் சாட்டினர்.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் கூற்றுப்படி, அப்பகுதியில் மக்கள் எவ்வளவு மின்சாரம் பயன்படுத்துகிறார்கள். எத்தனை முறை தங்கள் வீட்டுக் கதவைப் பயன்படுத்துகிறார்கள் போன்ற மக்களின் நடத்தைகளைக் கண்காணிக்க ஒரு மொபைல் பயன்பாட்டையும் போலீசார் பயன்படுத்துவதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

சீனாவில் உள்ள அனைத்து மதங்களும் பொது நோக்குநிலையில் சீனர்களாக இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி ஜி ஜின்பிங் கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் உத்தரவு பிறப்பித்ததில் இருந்து, அங்கு மேலும் ஒடுக்குமுறைகள் அதிகரித்துள்ளன. இந்த நிலையில் உய்குர் கலாச்சாரத்தை ஒழிக்க சீனா முயற்சிப்பதாக பல குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. சுமார் ஒரு மில்லியன் உய்குர்கள், கசாக் மற்றும் பிற முஸ்லிம்கள் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்கள் தங்கள் அடையாளத்தை விடுவதற்கான கல்வி கற்பிக்கப்படுவதாகவும், அவர்கள் ஹான் சீனர்கள் ஆதிக்கம் செலுத்தும் கம்யூனிச நாட்டில் ஒடுக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

குழந்தைகள் பெற்றோர்களிடமிருந்து பிரிக்கப்பட்டுள்ளனர். குடும்பங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. மொத்த மக்களும் கண்காணிப்பில் வைக்கப்பட்டு உலகின் பிற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளனர்.
நாட்டிலிருந்து தப்பிக்க முடிந்த சிலரே இந்த முகாம்களில் நிலவும் உடல், மன ரீதியான சித்திரவதைகளையும் பாலியல் சித்திரவதைகளையும் பற்றி பேசுவதாகக் கூறப்படுகிறது.

## நீண்டகால இன அழிப்பில் சீனா :

சீனா, இந்த உய்குர் முஸ்லிம் இனத்தை அழிப்பதற்கான பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த மக்களை தீவிரமாகக் கண்காணிப்பது, சித்ரவதை செய்வது, காரணமின்றி முகாம்களில் அடைப்பது போன்ற பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் சீனா உய்குர் முஸ்லிம் மக்களை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருகிறது.

உய்குர் இன மக்கள் நெடுங்காலமாக, சீனாவிடமிருந்து விடுதலை கோருகின்றனர். ஆனால், சீனா இதைப் பல ஆண்டுகளாக மறுத்து வருகிறது.

திபெத்தைப்போல சிஞ்சியாங்கும் ஒரு தன்னாட்சி பெற்ற பிராந்தியம். ஆனால், நடைமுறையில் அது நிகழ்வதில்லை. சீன அரசுதான் சிஞ்சியானை கட்டுப்படுத்திவருகிறது. இது அதிகமாக பருத்தி விளையக்கூடிய ஓர் இடம். மேலும், எண்ணெய் வளம் மிகுந்த ஒரு பகுதியாகவும் இது இருக்கிறது. உய்குர் முஸ்லிம்கள் தங்களின் பகுதியை விடுதலை பெற்ற பகுதியாக அறிவித்திருந்தனர். ஆனால் 1949-ம் ஆண்டு மாவோ தலைமையில் சீனாவில் ஏற்பட்ட புதிய கம்யூனிஸ்ட் அரசு, அதன் கட்டுப்பாட்டை முழுவதுமாக தனக்குள் கொண்டுவந்தது.

கம்யூனிச கோட்பாடுகளுடன் மத நம்பிக்கை ஒத்துப் போகாத காரணத்தால், மத நம்பிக்கைகளை அழித்தொழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

சீன அரசின் உதவியோடு சீனாவின் பெரும்பான்மை இனமான ஹான் குழுவினர் 1950-களில் உய்குர் மக்கள் வாழும் பகுதிகளுக்குக் குடிபெயரத் தொடங்கினர். ஹான் மக்கள் அவர்களுக்கென கட்டமைப்புகளையும், வர்த்தகங்களையும் உருவாக்கினர். தற்போது அங்கு 40 சதவிகித அளவில் ஹான் மக்கள் இருக்கிறார்கள்.

## செழிப்பு மிகுந்த சிஞ்சியாங் மண்

சீனாவின் மிகப்பெரிய பகுதியான சிஞ்சியாங் நிர்வாக ரீதியாக சீனாவிற்குள் ஒரு தன்னாட்சி பகுதி. தாதுக்கள் நிறைந்துள்ள பகுதி. மேலும், அது இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட எட்டு நாடுகளுடன் எல்லைகளைப் பகிர்ந்துகொள்கிறது.

உய்குர்கள் முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மாண்டரின் மொழியை தங்கள் சொந்த மொழியாகப் பேசமாட்டார்கள். அவர்கள் சீனாவின் பிரதான நிலப்பகுதியிலிருந்து வேறுபட்ட இனமும் கலாச்சாரமும் கொண்டவர்கள்.

கடந்த சில தசாப்தங்களாக, பொருளாதார செழிப்பு சிஞ்சியாங்கில் வந்துள்ளதால், அது அதிக எண்ணிக்கையிலான ஹான் சீனர்களை அங்கே கொண்டு வந்துள்ளது. அவர்கள் சிற

ந்த வேலைகளை குறிவைத்துள்ளனர். மேலும், உய்குர்கள் தங்களுடைய வாழ்வாதாரங்களையும் அடையாளத்தையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளதாக உணர்ந்தனர்.

2014 இல், ஜனாதிபதி ஷி ஜின்பிங் சிஞ்சியாங்கிற்கு வருகை தந்தார். அவரது பயணத்தின் கடைசி நாளில், உரும்கியில் உள்ள ஒரு ரயில் நிலையத்தில் நடந்த தற்கொலை குண்டு வெடிப்பு தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். கிட்டத்தட்ட 80 பேர் காயமடைந்தனர்.

இதற்கு சில வாரங்களுக்கு முன்பு, உய்குர் ஆயுததாரிகள் ஒரு ரயில் நிலையத்தில் குத்திக் கொல்லப்பட்டனர். அதில் 31 பேர் கொல்லப்பட்டனர். இதைத்தொடர்ந்து, மே மாதம், அந்தப் பிராந்தியத்தில் ஒரு காய்கறி சந்தையில் ஏற்பட்ட குண்டுவெடிப்பில் 39 பேர் கொல்லப்பட்டனர். இந்த வன்முறைகளுக்குப் பிறகு பதிலடி கடின மாக்கப்பட்டது. சீன அரசாங்கம் எப்படியோ உய்குர்க்களை வெற்றிகொண்டது.

உலகின் பிற பகுதிகளில் பயங்கரவாத தாக்குதல்கள் மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா விலகிய நிலையில், ஒரு உள்ளூர் போர்க்குணமானது ஒரு பயங்கரவாத-பிரிவினைவாத சக்தியாக வளரக்கூடிய ஒன்றாக கருதப்பட்டது. இது சீனாவிலிருந்து விலகி ஒரு சுயாதீனமான 'கிழக்கு துர்கிஸ்தான்' அமைப்பதில் உறுதியாக இருந்தது.

இங்கிருந்து வரும் சீனக் கொள்கை முழு சமூகத்தையும் சந்தேக நபர்களாகக் கருதுவதோடு, ஒரு தனித்துவமான உய்குர் அடையாளத்தை மெதுவாக நீக்குவதற்கு முறைப்படுத்தப்பட்ட திட்டத்தைத் தொடங்குகிறது.

**சீனாவின் மறு கல்வி முகாம்கள் :**

தீவிரவாதம் என்றால் என்ன என்பதை அரசாங்கம் தீர்மானிப்பதன் மூலம், தீவிரவாதத்தின் எந்த அறிகுறிகளையும் காண்பிப்பதற்காக மக்களை அரசாங்கம் நடத்தும் தீவிரமயமாகுதலை நீக்கும் முகாம்களுக்கு அனுப்ப முடியும்.

தீவிரவாதத்தின் அறிகுறிகளாக நீளமான தாடி, ரம்ஜானின் போது உண்ணாவிரதம், பெரும்பான்மையினரிடமிருந்து மாறுபட்டு வித்தியாசமாக ஆடை அணிதல், ஈத் வாழ்த்துகளை அனுப்புதல், அடிக்கடி பிரார்த்தனை செய்தல், புகைபிடித்தல் மற்றும் குடிப்பழக்கத்தை கைவிடுதல், அல்லது மாண்டரின் மொழி தெரியாமல் இருப்பது ஆகியவை தீர்மாணிக்கப்படுகிறது.

மூன்று ஆண்டுகளில், அரசாங்கம் ஒரு மில்லியன் மக்களை மறு கல்வி முகாம்களில் அனுப்பியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் அவர்களுடைய வேலைகளையும், சொத்துக்களையும் அவர்களின் குழந்தைகளையும் விட்டு வெளியேறுகிறார்கள்.

இந்த தடுப்பு முகாம்களுக்குள் இருந்து சித்திரவதை செய்திகள் வந்துள்ளன.

**இனப்படுகொலையில் சீனா :**

சிஞ்சியாங்கில் உய்குர் முஸ்லிம் மக்களுக்கு எதிராக சீனா இனப்படுகொலையில் ஈடுபட்டதாக, பிரிட்டனில் அமைக்கப்பட்ட அதிகாரப்பூர்வமற்ற தீர்ப்பாயம் மேற்கொண்ட விசாரணையின் இறுதி அறிக்கையின் வாயிலாகத் தெரியவந்துள்ளது. உய்குர் மக்களுக்கு எதிராக சீன அரசு கருத்தடை போன்ற நடவடிக்கைக ளில் ஈடுபட்டதே, இந்த முடிவுக்கு வருவதற் கான முதன்மைக் காரணம் என, அத்தீர்ப்பா யம் தெரிவித்துள்ளது.

இந்த விசாரணையை தலைமையேற்று நடத்திய புகழ்பெற்ற பிரிட்டிஷ் வழக்குரைஞர் சர் ஜப்ரி நைஸ் கூறுகையில், நீண்ட கால விளைவாக உய்குர் முஸ்லிம்கள் உள்ளிட்ட இன சிறுபான்மை மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில், திட்டமிட்ட, முறையான மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளில் சீனா ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும், சிஞ்சியாங்கில் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிரான துன்புறுத்தல்களுக்கு சீன அதிபர் ஷி ஜின்பிங் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் முதன்மை பொறுப்பிலிருந்து நழுவியுள்ளனர் என, தீர்ப்பாயம் நம்புவதாக, அவர் தெரிவித்தார்.

# கதிர்காம பாதையாத்திரையில் ஈடுபட்ட ஒருவர் மட்டு மாமாங்கம் ஆலயத்தில் சடலமாக மீட்பு



கதிர்காமத்திற்கு சந்நதியில் இருந்து பாதயாத்தரை மேற்கொண்டு மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலையத்தை வந்தடைந்த யாத்தரை ஒருவர் நேற்று திங்கட்கிழமை (29) ஆலயத்தில் உயிரிழந்துள்ளதாக மட்டு தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் கைதடி மத்திய வீதியைச் சேர்ந்த 74 வயதுடைய இராசையா சிவலிங்கம் என்பவரே இவ்வாறு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 6ம் திகதி கதிர்காமத்துக்கான பாதயாத்திரை யாழ் சந்நதி முருகன் ஆரலயத்தில் ஆரம்பித்த பாதையாத்திரை குழுவில் பங்கேற்று ஞாயிற்றுக்கிழமை (28) திகதி இரவு மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலையத்தை வந்தடைந்து ஆலைய வளாகத்தில் தங்கியிருந்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று காலையில் குறித்த நபர் பணிஸ் உண்ட பின்னார் அமர்ந்திருந்த நிலையில் திடீரென நிலத்தில் சரிந்து வீழ்ந்ததையடுத்து அவர் உயிரிழந்துள்ளார் என பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

இதனையடுத்து பிரேத பரிசோதனைக்காக சடலத்தை மட்டு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சம்மாந்துறை ஜமாலியா அதிபர் தொடர்பில் ஏட்டிக்கு போட்டியாக ஆர்ப்பாட்டம்!



சம்மாந்துறை ஜமாலியா வித்தியாலய அதிபர் விவகாரம் தொடர்பில் இரு கோஷ்டிகள் ஏட்டிக்குப் போட்டியாக வலயக்கல்விப் பணிமனையின் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தின.

நேற்று (29) திங்கட்கிழமை காலை 8 மணி முதல் 9 மணி வரை இரு தரப்பினரும் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்மாந்துறை பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்து சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா மற்றும் அதிகாரிகளோடு பேசி ஆர்ப்பாட்ட ஸ்தலத்திற்கு வந்து ஆர்ப்பாட்டக்காரர்களோடு கலந்துரையாடப்பட்டது.

அதன் பின்பு இரண்டு கோஷ்டிகள் சார்பிலும் இரண்டு இரண்டு பேரை அழைத்து அலுவலகத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இறுதியாக இந்த விடயம் தொடர்பாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு விடயத்தை தெரிவித்து இதற்கான தீர்வைப் பெற்றுத் தருவதாக பணிப்பாளர் உமர் மௌலானா உறுதியளித்ததை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றார்கள்.

# அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமாவின் புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டம்



அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபையின் நடப்பாண்டுக்கான நிர்வாகத் தெரிவுக் கூட்டம் அதன் தலைவர் அஷ்ஷெய்க் எஸ். எச்.ஆதம்பாவா மதனி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (28) மாலை சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

இதன்போது சபையின் புதிய தலைவராக அஷ்ஷெய்க் ஐ.எல்.எம். ஹாஷிம் அஷ்ரி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

செயலாளராக மீண்டும் அஷ்ஷெய்க் ஏ.எல். நாசிர்கனி ஹாமி தெரிவானதுடன் பொருளாளராக அஷ்ஷெய்க் இஸட்.எம்.நதீர், உப தலைவர்களாக அஷ்ஷெய்க் எம்.ஐ.ஜஹ்பர் பலாஹி, அஷ்ஷெய்க் அன்சார் மௌலானா நழீமி, உப செயலாளராக அஷ்ஷெய்க் எம்.எல்.பைஷல் காஷிபி ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுடன் 21 உலமாக்களைக் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த 1998ஆம் ஆண்டு முதல் சுமார் 25 வருட காலம் அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவராக பணியாற்றி வந்த அஷ்ஷெய்க் எஸ்.எச். ஆதம்பாவா மதனி இதன்போது ஓய்வு பெறுவதாக அறிவித்து பிரியாவிடை பெற்றுக் கொண்டார்.

# குருக்கள்மாரும் ஆர்வம் செலுத்திய நற்பிட்டிமுனை இரத்ததான முகாம்



நற்பிட்டிமுனை இந்து இளைஞர் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான முகாம் நேற்று முன்தினம்(28) ஞாயிற்றுக்கிழமை சிவசக்தி மகா வித்யாலயத்தில் நடைபெற்றது. குருதி வழங்குவதில் ஆலய குருக்கள்மாரும் ஆர்வம் செலுத்தினர்.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் உதவியோடு "உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்" என்ற திட்டத்தின் கீழ் இந்த இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 4:00 மணி வரை இந்த முகாம் இடம்பெற்றது என்றும் 63பேர் உதிரம் வழங்கினர் என்றும் இந்து இளைஞர் மன்ற பிரமுகர் பியந்த தெரிவித்தார்.

**அன்பான வாசகர்களுக்கு..!**

உலகத் தமிழர்களின் கைகளில்
தவழும் மின்னிதழ் மற்றும்
அச்சு வடிவிலும் தினசரி மற்றும்
வார வெளியீடாக வெளிவரும்
தேசியம் பத்திரிகைக்கு
தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும்
ஆக்கபூர்வமான கட்டுரைகள்,
கவிதைகள்,உண்மைச் சம்பவங்கள்,
செய்திகள் போன்றவற்றை எமக்கு
அனுப்பி தேசியம் பத்திரிகையை
வலுவடையச் செய்யுங்கள்.

No. 27, Kannathiddy Road, Jaffna.
Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com
Whatsapp : +94 76 567 3339

தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற
இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில்
இணைந்து கொள்ளுங்கள்..!

SCAN ME

தேசியம் பத்திரிகையில்
உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க
தொடர்பு கொள்ளுங்கள்..!
021 222 7557 / +94 76 567 3339

தேசியம் பத்திரிகையில்
கதைகள் பேசும் பக்கத்திற்கு
சிறந்த புகைப்படங்கள்
பிரசுரிக்கப்படுகிறது...
நீங்கள் எடுத்த சிறந்த
படங்களை எங்களுக்கு
வாட்ஸ் ஆப் மூலம்
பெயருடன் அனுப்பி
வையுங்கள்..
+94 76 567 3339

# இலக்கியவாதிகள் அனைவரும் சமூகப்போராளிகளே : "நிலவின் கர்ப்பங்கள்" நூல் வெளியீட்டு விழாவில் அரச அதிபர்




இலக்கியவாதிகள் ஒரு வகையில் சமூக போராளிகளே. சமூக அவலங்களை சுட்டிக் காட்டும் காலக் கண்ணாடி அவர்கள். இவ்வாறு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் காரைதீவில் நடைபெற்ற "நிலவின் கர்ப்பங்கள்" நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

காரைதீவின் இளங்கவிஞர் விபுலசசி எழுதிய "நிலவின் கர்ப்பங்கள்" கன்னி கவிதை நூல் வெளியீட்டு விழா (27) சனிக்கிழமை மாலை 3 மணியளவில் காரைதீவில் நடைபெற்றது. கிழக்கு மாகாண கூட்டுறவுத்துறை ஆணையாளரும் கிழக்கு மேலதிக மாகாண கல்வி பணிப்பாளருமான எந்திரி நடராஜா சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில். பொருளாதார நெருக்கடி மிகுந்த இந்த காலகட்டத்தில் கவிஞர் விபுலசசி, தனது தந்தை தமிழாசான் அமரர் நல்லதம்பி மனோகரன் அவர்களின் 24 வது வருட ஞாபகார்த்தமாக இந்த கவிதை நூல் தொகுதியை வெளியிடுவது சாதாரணமானதல்ல. 140 பக்கத்தில் 96 கவிதைகளை அழகாக கோர்த்து அடுக்கி உள்ளார் . கவிஞர் விபுலசசி மனித அவலங்களை மனிதத்துவத்தை சிறப்பாக சொல்லுகின்றார். இந்தக் கவிதை நூல் சாகித்திய பரிசு பெறும் என்பதில் ஐயமில்லை. காரைதீவின் மைந்தன் சசிப்பிரியன் ஈழத்து இலக்கிய உலகில் நிச்சயமாக பிரகாசிப்பார். அவர் மேலும் பல நூல்களை படைக்க வேண்டும் என்றார்.

முதல் பிரதியை மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப் புரவலர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி நூலாசிரியர் மனோகரன் சசிப்பிரியனிடமிருந்து பெற்றுக் கொண்டார். ஏனைய அதிதிகளுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் பிரதிகள் வழங்கப்பட்டன. எழுத்தாளரும் உதவி கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா நிகழ்ச்சிகளை நெறியாள்கை செய்தார்.

நூல் நயவுரைகளை வெல்லாவெளி உதவி பிரதேச செயலாளர் வி.துலாஞ்சனன், கிழக்கு மாகாண கிராமிய கைத்தொழில் துறை திணைக்கள பிரதிப் பணிப்பாளர் இராகி. இளங்குமுதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நூல் வெளியீட்டு உரையை சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் பொது சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் நடேசன் அகிலன் நிகழ்த்தினார். வாழ்த்துரைகளை கிழக்குப் பல்கலைக்கழக தொழில் நுட்பபீட பீடாதிபதி கலாநிதி தவநாயகம் மதிவேந்தன் மற்றும் கவிஞர் வில்லு பாரதி முரளிதரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நூலாசிரியரின் உறவினரான ஓய்வு நிலை அதிபர் க.புண்ணியநேசன் நன்றியுரையாற்றினார். கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த ஆதார வைத்தியசாலையின் தாதிய உத்தியோகத்தரான மனோகரன் சசிப்பிரியனின் கன்னி கவிதை நூல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# கோடி கோடியாய் சம்பாதிக்கும் ஆலயங்கள் இந்து மக்களின் வறுமையை போக்க முடியாதா?

## காரைதீவில் மேலதிகஅரச அதிபர் ஜெகதீசன்கேள்வி!




வறுமையை காரணம் காட்டி இந்து மக்கள் மதம் மாற்றப்படுகின்றார்கள் என்று கூக்குரலிடுகின்றோம். ஏன் இந்து தனவந்தர்களால், இந்து அமைப்புகளால் இந்துமக்களின் வறுமையை துன்பத்தை போக்குவதற்கு முடியாதா? கோடி கோடியாய் சம்பாதிக்கின்ற ஆலயங்களுக்கு இது முடியாதா ?

இவ்வாறு, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் காரைதீவில் இடம் பெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய போது கேள்வி எழுப்பினார்.

இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் அம்பாறை மாவட்ட கிளை, மாவட்டத்தில் உள்ள 360 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு தலா 25 கிலோ கோதுமை மற்றும் 25 கிலோ அரிசி என்பவற்றை வழங்கி வைக்கும் நிகழ்வு காரைதீவு விபுலானந்தா மணி மண்டபத்தில் நடைபெற்றது .

இந்து ஸ்வயம் சேவக சங்க அம்பாறை மாவட்ட தலைவர் இரா.குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில்..

இந்து மக்கள் மக்களின் வறுமையினை பயன்படுத்தி மாற்று மதத்தினர் உதவியை செய்து மதம் மாற்றி வருகின்றனர். இதனை தொடர்ச்சியாக காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த நிலைமையை ஏன் இந்து அமைப்புகளால் இணைந்து ஏன் நிவர்த்தி செய்ய முடியாது? அதுபோல கோடிக்கணக்கில் சம்பாதிக்கும் பெரிய பெரிய ஆலயங்கள் இந்த இந்து மக்களின் வறுமையினை அல்லது துயரை ஏன் துடைக்க முடியாது? அம்பாறை மாவட்டத்தில் இருக்கின்ற அதே போல் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற பெரிய ஆலயங்கள் சேர்ந்தாலே இந்து மக்களின் வறுமையை நிச்சயம் போக்க முடியும்.

இறைவன் நேரடியாக வந்து மக்களின் பிரச்சினைகளை தேவைகளை ஒருபோதும் தீர்த்து வைப்பதில்லை. மாறாக சில மனிதர்களூடாக அமைப்புகளூடாக நம்மை போன்றவர்களை கருவியாக பயன்படுத்தியே மக்களின் பிரச்சினைகளை தேவைகளை தீர்த்து வைக்கின்றார்.

எனவே அந்த அமைப்பினர் மனிதாபிமானத்துடன் செயல்பட்டு இந்த மக்களின் வறுமையை போக்க முன்வர வேண்டும் என்று கூறி வருகின்றோம் ஆனால் அது அவர்களது காதுகளில் ஏறுவதாக இல்லை.

நாங்களும் ஒவ்வொரு கூட்டத்திலும் சொல்லிக் கொண்டிருக்கின்றோம் ஆலயங்கள் தங்கள் திருவிழாக்கள் என்றால் மக்களிடம் கையேந்துகிறார்கள். அதே மக்கள் அனர்த்தத்தில் அல்லது நாட்டு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்ற பொழுது அந்த மக்களுக்கு பெரிதாக உதவுவது இல்லை. இது போன்ற காரணங்களினால் அவர்கள் மதம் மாறுவதில் ஒரு பக்கம் நியாயமும் இருக்கின்றது. எனவே அந்த கேள்விக்குரிய விடை எம்மிடம் தான் உள்ளது என்பதனை மறந்து விட முடியாது. இங்கு அமெரிக்காவில் வாழ்கின்ற இந்து அன்பர்கள் அளித்த அன்பளிப்பு இந்த மக்களுக்கு வழங்கப்படுகின்றது. அதையிட்டு அவர்களுக்கு நன்றி கூறுகின்றோம். ஆனால் இதையிட்டு சந்தோசம் அடைய முடியாது. ஏனென்றால் இங்குள்ள இந்து தனவந்தர்கள் அமைப்புக்கள் ஆலயங்கள் இந்த விடயத்தை கவனிக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்த மத மாற்றங்களை தவிர்க்கலாம் தடுக்கலாம். இங்கே இந்து சேவக சங்க அம்பாறை மாவட்ட கிளை பாரியதொரு பணியை செய்து வருவதையிட்டு சந்தோசமடைகின்றேன். மேலதிக அரசாங்க அதிபர் என்ற வகையில் காரைதீவிலிருந்து ஏனைய தமிழ் கிராமங்களில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற இந்துஅன்பர்கள் இங்கு கஷ்டப்பட்டு வாழ்கின்ற இந்து மக்களுக்கு உதவுவதற்கு நீங்கள் நேசக்கரம் நீட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். என்றார்.

முதற்கட்டமாக சம்மாந்துறை காரைதீவு பிரதேசங்களைச் சேர்ந்த 169 விதவைத் தாய்மார்களுக்கு இந் நிவாரணம் முறைப்படி வழங்கி வைக்கப்பட்டன. பிரதேசத்திலுள்ள முக்கிய பிரமுகர்கள் அதிதிகளாக அழைக்கப்பட்டிருந்தனர். நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் சிறிகாந்தன் நன்றியுரையாற்றினார்.

## மாங்குளத்தில் பௌத்த யாத்தி...

மாங்குளத்தில் பௌத்த யாத்திரிகர் மடம் கட்டுவதற்கான காணி பங்கீடு தொடர்பில் முறையாக அழைப்பு விடுக்காமல் ஒருதலைபட்சமாக பிரதேச செயாலாளர் மற்றும் குடியேற்ற உத்தியோகத்தர்கள் முடிவெடுத்துள்ளனர் என்பதை முல்லைத்தீவு மாவட்டச் செயலாளருக்கு மாங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம் கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளது.

இக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டதாவது, மாங்குளம் 639 வீதியில் உணவுக் கட்டுப்பாட்டாளர் அலுவலகத்திற்கு சொந்தமான வெற்றுக்காணி ஒன்று உள்ளது.

தற்போது மேற்படி காணியை மாங்குளம் ஏ9 வீதியில் கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு யாத்திரிகர் மடம் கட்டுவதற்காக வழங்க ஒட்டுச்சுட்டான் பிரதேச செயலகத்தின் காணிப் பயன்பாட்டுக் குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

மேற்படி காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டத்திற்கு மாங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஏனைய பொது அமைப்புகளுக்கு உத்தியோகப்பூர்வ அழைப்பினை பிரதேச செயலாளர் அனுப்பவில்லை.

கிராமத்தின் பொதுத் தேவைகளுக்கு காணித்தேவை அதிகமாக இருக்கும் போது மேற்படி காணியை விகாரைக்கு யாத்திரிகர் மடம் கட்ட வழங்குவதற்கு உள்ளூர் மக்களின் அல்லது அவர்களின் பிரதிநிதியான பொது அமைப்புகளின் கருத்தினைக் தன்னிச்சையாக முடிவெடுத்துள்ளனர்.

எந்தவொருக் கூட்டமானாலும் முறையாக நிகழ்ச்சி நிரலுடன் முன்கூட்டியே உத்தியோகப்பூர்வமாக பொது அமைப்புகளுக்கு தெரிவிக்காமல் கூட்டம் நடைபெறும் அன்றைய அன்றைய தினமே காலையில் தொலைபேசி ஊடாக தெரிவிப்பதனால் பொது அமைப்புகளால் எந்த கருத்தினையும் முன்வைக்க முடியாத சூழலினை திட்டமிட்டே செய்து வருகின்றனர்.

உள்ளூர் மக்களின் பொது தேவைகளுக்காக மேற்படிக் காணி தேவைப்படுவதால் இக் காணியை மாங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு பங்கீடு செய்து வழங்குவதுடன், மாங்குளம் கிராம பொது அமைப்புகளுக்கு உத்தியோகப்பூர்வமாக மேற்படிக் காணி தொடர்பில் தகவல் தெரிவிக்காமல், கூட்டத்திற்கு முறையாக அழைப்பு விடுக்காமல் ஒருதலைபட்சமாக பிரதேச செயாலாளர் மற்றும் குடியேற்ற உத்தியோகத்தர்கள் முடிவெடுத்துள்ளனர் என்பதையும் தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். ஆகவே இது தொடர்பில் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம். - என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போரில் உயிரிழந்தவர்களுக்...

போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் பொது நினைவுத்தூபி அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள நிலையில் அந்த நிலைப்பாட்டை இரா.சம்பந்தன், கஜேந்திரகுமார், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன் உள்ளிட்ட தமிழ்த் தலைவர்கள் எதிர்த்துள்ளனர்.

தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் ஆதரித்துள்ளனர்.

"படையிலிருந்து உயிரிழந்தவனும், படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு உயிரிழந்தவனும் ஒன்றல்ல. மக்கள் தாம் விரும்பும் இடத்தில் நினைவேந்த உரித்து உண்டு.

இத்தனை ஆண்டுகளாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் எதிர்மறையாகச் சிந்தித்தவர்கள் தற்போது மாறுபட்டு சிந்திக்கின்றார்கள். இந்தச் சிந்தனையானது இதயசுத்தியாக இருக்கவேண்டும்" - என்று தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

"1983-2009 உள்நாட்டு இறுதிப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் பலர் உயிரிழந்துள்ளனர்.

அவர்களை ஒன்றாக நினைவு கூருவதற்கு நினைவுத் தூபி அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சரவையில் முன்வைத்தேன்.

## தமிழ்த் தேசிய அரசியலில்...

எவ்வாறு முடிந்தது என சி.வி.விக்கினேஸ்வரனை க.சுகாஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், சில வருடங்களுக்கு முன்னர் உங்களை உங்கள் கட்சியே முதலமைச்சர் பதவியிலிருந்து அகற்றி அரசியலிலிருந்து அப்புறப்படுத்த முற்பட்டனர்.

இதன்போது, கட்சி பேதங்களைக் கடந்து உங்களுக்காக வீதிக்கு இறங்கியதையிட்டு வெட்கப்படுகின்றேன். வேதனைப்படுகின்றேன்.

இனி ஒரு நிமிடங்கூட தமிழ்த் தேசிய அரசியலில் நீடிக்கத் தகுதியற்றவர் நீங்கள் என கடும் காரசாரமான தனது கருத்தினை முன் வைத்துள்ளார்.

## இந்தியாவும் தமிழ்க் கட்சிகளு...

எனினும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதனை மறுத்துள்ள நிலையிலும், சரத் வீரசேகர மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- "இந்தியாவில் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப வடக்கு - கிழக்கு தமிழ்க் கட்சிகள் செயற்படுகின்றன. அதன் வெளிப்பாடாகத்தான் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தமிழ்க் கட்சிகள் சந்திப்பதற்குத் திரைமறைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதன் ஏற்பாட்டாளராக இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தினர் செயற்படுகின்றனர்.

தீர்வு விடயம் தொடர்பில் பேச வேண்டுமெனில் இந்தியத் தரப்பினர் இலங்கை அரசுடன் பேச வேண்டும். அதேவேளை தமிழ்க் கட்சிகளும் தீர்வு விடயம் தொடர்பில் பேச வேண்டுமெனில் இலங்கை அரசுடன் பேச வேண்டும். அதைவிடுத்து இந்தியாவும் தமிழ்க் கட்சிகளும் திரைமறைவில் காதல் கொண்டால் அது இலங்கையின் முன்னேற்றத்துக்கு ஆபத்தாக அமையும். இது தொடர்பில் இலங்கை அரசு உரிய கவனம் செலுத்த வேண்டும்." - என்றார்.

## பௌத்த தேரர்களை நோக்கியும்...

கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளதாவது,

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ மற்றும் சமூக பேச்சாளர் நதாஷா எதிரிசிங்க ஆகியோருக்கு எதிராக அரசின் சட்டம், ஒழுங்கு விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னேடுக்கப்படுகின்றன.

சட்டம், ஒழுங்கு, நீதி துறை தன் கடமையை செய்யட்டும். அதேவேளை இந்நாட்டில் இனவாத வெறுப்பு பேச்சுகளை தொடர்ந்து இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மதங்களுக்கு எதிராக பேசி வரும் பௌத்த பிக்குகளுக்கு நோக்கியும் இதே சட்டம், ஒழுங்கு, நீதி துறை பாய வேண்டும் என்றார்.

எந்தவொரு மத தலைவரும், செயற்பாட்டாளரும், தமது இனவாத, மதவாத நடவடிக்கைகள் தொடர்பில் இனிமேல் சட்டத்தின் முன் விலக்கு பெற கூடாது எனவும் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

பாஸ்டர் ஜெரோம், முற்போக்கு பேச்சாளர் நதாஷா ஆகியோரை சுற்றி வளைத்திருக்கும் பொலிஸ், நீதிமன்ற சட்டங்கள் என்பன , நாட்டில் இனவாத வெறுப்பு பேச்சுகளை தொடர்ந்து பேசி வரும் பௌத்த பிக்குமார்களுக்கு எதிராகவும் பயன்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் இனிமேல் இந்நாட்டில், சட்டம் ஒரு பக்க சார்பாக இருக்க முடியாது எனவும் மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பேராசிரியர்கள் ஒன்றிணைந்து...

பேராசிரியர்கள் ஒன்றிணைந்து செயற்படுவார்கள் என்றால் வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தை கல்வியால் உச்சத்திற்குக் கொண்டுவர முடியும் என செஞ்சோற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

செஞ்சோற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அறநிதிய சபை நடாத்தும் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்படத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பேராசிரியர்கள் சமுகப்பொறுப்பாளர்கள் சான்றோர்கள் ஒன்றுகூடி நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் சிந்திக்கவேண்டும் பேராசிரியர்கள் நல்லதை நினைப்பார்கள் என்றால் வடக்கு கிழக்கு மலையகத்தை கல்வியால் உச்சத்துக்குக் கொண்டு வரமுடியும்.

பல்கலைக்கழகத்திற்குள் மாத்திரம் பேராசிரியர்கள் இருக்காது சமூகத்திற்குள் இறங்கி சமூகத்தைப் பாதுகாக்க முன்வரவேண்டும். யாழ்.பல்கலைக்கழத்தில் தற்போதுள்ள துணைவேந்தரின் காலத்தில் பல பேராசிரியர்கள் உருவாகி வருகின்றார்கள்.

இவ்வாறாக வருகின்ற அனைத்துப் பேராசிரியர்களும் ஒன்றிணைந்து சமுதாயத்தை முன்னேற்றவேண்டும். அது மட்டுமன்றி துணைவேந்தர் பல்கலைக்கழகத்திற்கு புதிய பாடத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்றால் அதற்கு காணிகள் கட்டடங்கள் இல்லை என்று அந்தத் திட்டத்தினை கைவிடாது தெல்லிப்பளை தேவஸ்தானத்திடம் தொடர்பு கொண்டால் நாம் அதற்கான வழி அமைத்துத் தருவோம்.

யாழ்ப்பாணத்திற்கு திருமண மண்டபங்கள் போதும் இனி கல்வி மண்டபங்கள் உருவாக வேண்டும். தொழிற்சாலைகள் உருவாக வேண்டும். இதன்மூலம் கல்வி இடைவிலகிய மாணவர்கள் வேலைவாய்ப்பில்லாதவர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்கி வேலை வாய்ப்புக்களை வழங்க முன்வரவேண்டும்

தற்போதைய சூழலில் தனியார் பல்லைகழகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. இத்தகைய அனுமதிகள் பெற்று தனியார் பல்கலைக்கழகங்கள் இங்கும் உருவாகின்றபோது வாள்வெட்டுக் கலாச்சாரம் போதைவஸ்துக் கலாச்சாரங்கள் இல்லாது போகும் நிலை ஏற்படும் எனவே பேராசிரியர்கள் கல்விமான்கள் சமுதாயப் பெரியார்கள் சான்றோர்கள் ஒன்றுகூடி இதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும்.

எமதுபிரதேசத்தை அழகாக்குவதற்கு தெற்கில் இருந்துதான் யாரும் வரவேண்டியது இல்லை நாங்களே அதனைசெய்ய முன்வரவேண்டும் . இளைய தலைமுறையினர் கற்பனை வளம் இல்லாதவர்களாக காணப்படுகின்றார்கள் பிறர் கற்பனையிலேயே அவர்கள் இருக்கின்றார்கள் இதில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் நல்லமுயற்சிகளை செய்யத்தொடங்கினால் அலையத்தேவையில்லை எல்லாம் எங்களைத் தேடியே வரத் தொடங்கும் நல்லதை சிந்திக்கவேண்டும் என்றார்.

## அரசியல் ரீதியிலான ஆளுநர்...

மூன்று ஆளுநர்களுக்குமே மாகாணம் தொடர்பான அடிப்படை அறிவே கிடையாது.

அண்மையில் நீக்கப்பட்ட மூன்று ஆளநர்களுமே எதேச்சதிகாரமாக செயற்பட்டதுடன் மாகாணம் தொடர்பான அடிப்படை அறிவே கிடையாது. ஆனால் ஆளுநராக நியமிக்கப்பட்ட மூவருமே மாகாண நிர்வாகத்துடன் ஏதோவொரு வகையில் தொடர்புபட்டு செயல் பட்டவர்கள்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மத்திய மாகாண சபையிலே உறுப்பினராகவும், அமைச்சராகவும் இருந்து செயற்பட்டவர். வடமேல் மாகாண ஆளுநர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தென்மாகாண சபை உறுப்பினராக இருந்து செய்யப்பட்டவர். வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் ஏற்கனவே வடக்கு மாகாணத்தில் ஆளுநராக இருந்ததுடன், நிர்வாக ரீதியான விடயங்களிலும் அனுபமிக்கவர்.

அரசியல் ரீதியிலான காரணங்களுக்காக ஆளுநர்கள் மாற்றம் செய்யப்பட்டாலும் கூட இவ்வாறான அனுபவங்கள் கொண்டவர்களை நியமிக்கும் போது அதனை சிறப்பாக செய்ய முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

## ஜனாசா எரிப்பு நீடிக்க ரிஷாத்...

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் முன்னின்று உழைத்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தெரிவித்துள்ளார்.

நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு இவ்வாறு தெரிவித்திருந்தார். மத நல்லிணக்கத்தினை குலைக்கும் வகையில் இஸ்லாம் மதத்திற்கு எதிராக கதைகளை கதைத்த ஞானசார தேரர் கூட ஜனாசா அடக்கத்திற்கு சம்மதம் தெரிவித்ததாகவும் ஆனால் கர்தினால் மெல்கம் ரஞ்சித் அவர்கள் அதனை எதிர்த்ததாகவும் அலி சப்ரி ரஹீம் தெரிவித்திருந்தார்.

அவ்வாறு இருக்க இலங்கைக்கு அப்போது விஜயம் செய்த அந்நாள் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒரே மேசையில் சந்தித்து கேட்டது ஒரே ஒரு விடயம் தான், உங்களுக்கு ஜனாசா பிரச்சினையை வைத்து அரசியல் செய்ய வேண்டுமா? ஜனாசா பிரச்சினையை தீர்க்கணுமா என்று கேட்டனர். அப்போது தீர்க்க வேண்டும் எனக் கோரினோம்.

அப்போது இம்ரான் கான் கூறியது தான் இப்போதிலிருந்து ஜனாசா விவகாரத்தில் இருந்து சற்றே தள்ளி இருக்கக் கோரினார். அவர் பாகிஸ்தான் செல்ல மறுபுறம் ஜனாசா அடக்கம் வர்த்தமானி வெளியாது.

இதையே நாமும் செய்ய இருந்தோம் எங்கே எமது தீர்மானம் முடிவுக்கு வருகையில் எதிர் கட்சியில் உள்ள நாடாளுமன்ற முஸ்லிம் உறுப்பினர்கள் சந்தி சந்தியாக நின்று ஆர்ப்பாட்டம் செய்ய தீர்மானம் பிற்போடப்பட்டது.

ஏனெனில் அவ்வாறு செய்வதால் மக்கள் நினைப்பது ஆர்ப்பாட்டத்தால் தான் ஜனாசா எரிப்பு முடிவுக்கு வந்தது என்று. ஆனால் அதில் உண்மை இல்லை. நாம் இதையெல்லாம் யோசித்து தான் பசில் ராஜபக்ஷவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டோம் என அலி சப்ரி ரஹீம் குறிப்பிட்டிருந்தார்.

# எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கையாளுதல் குறித்து அரச அதிகாரிகளுக்கு இடையில் யாழில் கலந்துரையாடல்







பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கையாளுதல் தொடர்பில் அரசாங்கத்திற்கு மற்றும் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கு சிபாரிசு செய்யப்படும் பரிந்துரைகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் (HRCSL) யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை(29) பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பொது மக்களின் எதிர்ப்பு போராட்டங்களைக் கையாள்வதில் அரச மற்றும் சட்ட அமலாக்க அதிகாரிகளுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்களை மே மாதம் 12ம் திகதி கொழும்பில் வெளியிட்டது.

பிராந்திய மட்டத்தில் இவ்வழிகாட்டுதல்களை அறியப்படுத்துவதும் மற்றும் பங்கேற்பாளர்களிடமிருந்து கருத்துக்களை பெற்று இவ்வழிகாட்டுதலை மெருகேற்றுவதும் இக்கலந்துரையாடலின் நோக்கமாக காணப்பட்டது.

# யாழில் மோட்டார் சைக்கிளும் கனரக வாகனமும் மோதி விபத்து இளைஞர் உயிரிழப்பு




யாழ்ப்பாணம் நகரை அண்மித்த பகுதியில் மோட்டார் சைக்கிளும் கனரக வாகனமொன்றும் மோதிக்கொண்டதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததோடு, கனரக வாகன சாரதி கைதான சம்பவம் நேற்று திங்கட்கிழமை (29) மதியம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதி, முட்டாஸ் கடை சந்திக்கு அருகாமையில் நடந்த இவ்விபத்து தொடர்பில் தெரியவருவதாவது:

யாழ்ப்பாண நகர் பகுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் யாழ் நகரை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கனரக வாகனமொன்றும் மோதியதில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற இளைஞர் உயிரிழந்துள்ளார். மீசாலையைச் சேர்ந்த இராஜரட்ணம் அபிதாஸ் என்கிற 29 வயதானவரே இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அதனையடுத்து, கனரக வாகன சாரதியை யாழ்ப்பாண பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அத்தோடு, சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதையடுத்து, விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பலமாகவே உள்ளது : புதிய பிரதேச செயலக அங்குரார்ப்பண நிகழ்வில் அமைச்சர் ஜீவன்



அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவோடு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பலவீனமடைந்து விட்டது என சிலர் விமர்சனங்களை முன்வைத்தனர். ஆனால் காங்கிரஸ் இன்னமும் பலமாகவே உள்ளது.

இதற்கு எமது தற்போதைய அரசியல் வகிபாகமே சிறந்த சான்று என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில், தலவாக்கலை உப பிரதேச செயலகம், நோர்வூட் உப பிரதேச செயலகம் என்பன பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் புதிய பிரதேச செயலகங்களை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று (29) நடைபெற்றது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன், நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட, அம்பகமுவ மற்றும் நுவரெலியா பிரதேச செயலாளர்கள், உள்ளுராட்சி மன்ற செயலாளர்கள், கிராம, சமூர்த்தி, நலன்புரி ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள், கட்சி பிரமுகர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

புதிய பிரதேச செயலகங்களை திறந்து வைத்த பின்னர் ஊடகங்களிடம் உரையாற்றிய அமைச்சர் ஜீவன் தொண்டமான்,

"ஒரு வருடத்துக்கு முன்னர், உப செயலகத்தை திறந்து வைத்தபோது, அதற்கு எதிராக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. பிரதேச செயலகம் கோரும் நிலையில், உப செயலகம் எதற்கு எனவும் கேள்விகள் எழுப்பட்டன.

அப்போது பிரதேச செலயகம் நிச்சயம் உருவாகும் என நாம் பதிலளித்தோம். அதனை இன்று செய்து முடித்துள்ளோம். வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதும், சொல்வதை செய்வதும்தான் காங்கிரஸின் அரசியல் பலம்.

இராஜங்க அமைச்சு பதவி எமக்கு கிடைத்தபோது, ஆறுமுகன் தொண்டமானின் மறைவோடு காங்கிரஸ் பலவீனமடைந்துவிட்டது என விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. நாம் அமைதி காத்தோம். மறைந்த தலைவர் காட்டிய வழியில் நடந்தோம்.

எமது தவிசாளர் தேசிய சபையில் உள்ளார். தலைவர் கிழக்கு மாகாண ஆளுநராக இருக்கின்றார். நான் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அமைச்சு பதவியை வகிக்கின்றேன். ஆக இருந்ததைவிடவும் காங்கிரஸ் பலமாகவே உள்ளது.

எமது மக்களின் எதிர்பார்ப்புகளை நிச்சயம் நிறைவேற்றி வருவோம். அடுத்ததாக பல்கலைக்கழக விவகாரத்தையும் செய்து முடிப்போம்." - என்றார்.

தமிழர் தாயகம் எங்கும்!
வெளிவந்துவிட்டது!
தேசியம் பத்திரிக்கை!

கல்வி,சமூக,அரசியல்
வாரந்த இதழ்
அனைத்து பத்திரிகை
கடைகளிலும் கிடைக்கும்.








இப்பத்திரிகை அசுரன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கன்னாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, பிரசுரமாக வெளியிடப்படுகிறது.